


பக்கம் 13

# பெட்டாலிங் ஸ்திரீட் பகுதியில்

# பெயர்ப் பலகைகளில் சீன வார்த்தகள்

## ஆகற்றப்படாது என வாக்குறுதி

கோலாலம்பூர், பிப். 25-

கோலாலம்பூர், பெட்டாலிங் ஸ்திரீட் பகுதியில் உள்ள பெயர்ப் பலகைகளிலிருந்து சீன எழுத்துகள் அகற்றப்படும் என்று கூறப்படுவதை கோலாலம்பூர் மாநகர் மன்றம் நேற்று மறுத்தது. அக்கூற்றுகள் அடிப்படையற்றவை ஆகும். பெட்டாலிங் ஸ்திரீட் அங்காடிக் கடைகள் செயல்படும் பகுதியில் உள்ள பெயர்ப் பலகைகள் அனைத்தும் வழிகாட்டிகளுக்கு ஏற்பவும் கொள்கைகளுக்கு ஏற்பவும் அமைந்துள்ளன.

## பெட்டாலிங் ஸ்திரீட் பகுதியில்...

ஆகவே, பெயர்ப் பலகைளில் உள்ள சீன எழுத்துகளை மாற்றவோ அகற்றவோ கோலாலம்பூர் மாநகர் மன்றம் எண்ணம் கொண்டிருக்கவில்லை என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது. பெயர்ப் பலகைகளில் சீன எழுத்துகளை மாநகர் மன்றம் அகற்றப் போவதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று கோலாலம்பூர் அங்காடி மற்றும் சில்லறை வர்த்தகச் சங்கத்தின் தலைவரை மேற்கோள்காட்டி தகவல் வெளியாகியிருந்தது. தலைநகரில் உள்ள அனைத்து பெயர்ப் பலகைகளும் நடப்பில் உள்ள துணைச் சட்டங்களுக்கு ஏற்றபடிதான் உள்ளன. சமூகத்தின் மரபு, பண்பாடு மற்றும் தேவைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அவை இருப்பது உறுதி செய்யப்படும் என்று மாநகர் மன்றம் கூறியுள்ளது.